| STC No.975/2023 | PW:1 - திரு. சந்தோஷ் | 25.02.2026 |
|---|---|---|

**(எதிரி ஆஜரில் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317/ 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**
**குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி :**

4. எதிரி எங்கள் நிறுவனத்தில் எந்த தேதியில் சிட்டில் சேர்ந்தார் என்றாலும், அந்த சிட்டின் தொகை எவ்வளவு என்றாலும் தேதி ஞாபகம் இல்லை, ரூபாய் 3 இலட்சம் சீட்டாகும். சிட்டு தொகையை எதிரிக்கு எந்த தேதியில் கொடுத்தோம் என்றால் தேதி ஞாபகம் இல்லை. சிட்டு தொகையை எதிரி எத்தனை தவணைகளாக செலுத்த வேண்டும் என்றால் 20 மாத தவணையாக செலுத்த வேண்டும்.

5. எதிரி எவ்வளவு தொகையை மாத தவணையாக செலுத்த வேண்டும் என்றால் மாதம் ரூ.15,000/- செலுத்த வேண்டும். அதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, கணக்கு-வழக்கு அறிக்கை உள்ளது. இதுவரை எதிரி எவ்வளவு தொகைகளை திருப்பி செலுத்தியுள்ளார் என்றால் Statement பார்க்க வேண்டும். எதிரி எந்த தேதியில் காசோலையை கொடுததார் என்றால் 03.10.2022 அன்று கொடுத்தார்.

6. எதிரி நிரப்பப்படாத காசோலை கொடுத்தார் என்றால் இல்லை. காசோலை எந்த தேதியில் திருப்பப்பட்டது என்றால் சரியாக தெரியாது. என்ன காரணத்திற்காக திருப்பப்பட்டது என்றால் போதிய பணமில்லை என்று திருப்பப்பட்டது. அது தொடர்பாக சட்ட அறிவிப்பு அனுப்பியுள்ளோமா என்றால் அனுப்பினோம். அறிவிப்பு அனுப்பிய தேதி ஞாபகம் இல்லை.

G.SARAVANAKUMAR Digitally signed by G.SARAVANAKUMAR Date: 2026.02.25 18:11:57 +0530

7. எதிரி நான் சொல்வது போல் பணம் எதுவும் எங்கள் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டியது இல்லை என்றாலும், நான் சொல்லும் தேதியில் எதிரி காசோலை கொடுக்கவில்லை என்றாலும், சீட்டில் சேரும்போது பிணையமாக கொடுக்கப்பட்ட காசோலையை தவறாக பயன்படுத்தி அதில் தவறான தொகை நிரப்பி பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over / interpreted to the witness and same has been admitted by the witness to be correct.

G.SARAVANAKUMAR

Digitally signed by G.SARAVANAKUMAR
Date: 2026.02.25 18:12:03 +0530

**PRINCIPAL DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, GUDALUR.**